வரு.73 இல. 14 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
தினகரன் வாரமஞ்சரி
2021 ஏப்ரல் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
April 04 Sunday, 2021
32 பக்கங்கள் 40/-



















லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் அமரர் டி.ஆர்.விஜேவர்தனவின் 135ஆவது ஜனன தினத்தையொட்டி லேக்ஹவுஸ் நிறுவனத்தில் நேற்று முன்தினம் (02) இரவு முழுவதும் பிரித் பாராயணம் நடைபெற்றது. நிகழ்வில் நிறுவனத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டப்ளியூ தயாரத்ன பௌத்த குருமாரை ஆராதனை செய்வதையும் விஜயா பத்திரிகை நிறுவனத் தலைவர் ரஞ்சித் விஜயவர்தன அமரர் டி.ஆர்.விஜேவர்தனவின் படத்துக்கு மலர் மாலை அணிவிப்பதையும் காணலாம்.
(படம்: ருவன் டி சில்வா, ஹிரந்த குணதிலக)

உயிர்த்த ஞாயிறு தின நிகழ்வுகள்

## நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

### பாதுகாப்பு அமைச்சு கண்காணிப்பு

ஸாதிக் ஷிஹான், சுப்பிரமணியம் நிசாந்தன்




2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின குண்டுதாக்குதலின் இரண்டாவது ஆண்டை நினைவுகூரும் அதேசமயம், இன்று 4ஆம் திகதி நடைபெறும் உயிர்த்த ஞாயிறு தின நிகழ்வுகள் மற்றும் பரிசுத்த வாரத்தை முன்னிட்டு பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் நாடு முழுவதும்

அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள விஷேட பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் :

"உன்னதங்களிலே இறைவனுக்கு மகிமை உண்டாகுக! பூவுலகில் நல் மனதோர்க்கு அமைதி ஆகுக!"







நீண்டகால சட்டவிரோத தங்கக் க

## கட்டுநாயக்கா
## 17 கிலோ த

கே.அசோக்குமார்

20 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதி வாய்ந்த 17 கிலோ எடையுள்ள 161 தங்க கட்டிகள் நேற்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

சுங்கத் திணைக்களம் நடத்திய விரிவான விசாரணைகளின் இறுதியில் நீண்டகாலமாக நடத்திவந்த சட்டவிரோத தங்கக்கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தின் சுத்திகரிப்பு தொழிலாளி ஒருவரின் உதவியுடன் தங்கக் கடத்தல் நடத்தப்பட்டுள்ளது. டுபாயிலிருந்து கொண்டுவரப்பட்ட தங்கக்கட்டிகளை கறுப்புநிற டேப்களினால் சுற்றி விமான நிலையத்தின் மலசலகூடத்தில் மறைத்து வைக்கின்றனர். மலசலகூட சுத்திகரிப்பு தொழிலாளி இவற்றை எடுத்து புலோர் பொலிஷ் இயந்திரத்துக்குள் சூட்சுமமாக மறைத்து வைத்து நிலத்தை சுத்திகரிப்பதாக காண்பித்து சுங்க திணைக்கள அதிகாரிகளுக்கு தெரியாமல் வெளியில் எடுத்து வருகின்றனர். மலசல கூடத்துக்குள் மறைத்து

04

டுபாயிலிருந்து எடுத்து வரப்பட்டு
விமான நிலைய சுத்திகரிப்பு
தொழிலாளியின் உதவியுடன்
நாட்டுக்குள் கடத்த திட்டம்

20 கோடி ரூபாவுக்கும் மேல் பெறுமதி என்கிறது சுங்கம்



## மனித விடுதலை பற்றிய இயேசுவின் போதனைகள் சமூகத்தின் அடித்தளம்

### புதியதோர் வாழ்வு பற்றி சிந்திப்போம் - ஜனாதிபதி



உயிர்ப்பு விழா உலக வாழ் கிறிஸ்தவ மக்களின் உன்னதமான பண்டிகையாகும். உயிர்ப்பு விழாவின் பொருள், பாவத்திலிருந்து இரட்சிப்பு பெறுவதாகும். பாவத்திலிருந்து விடுபட்டு, செய்த பாவத்திற்காக மனம் வருந்தி புதியதோர் வாழ்க்கையை ஆரம்பிப்பதையும் இது குறித்து நிற்கிறது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ உயிர்ப்பு விழா வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவ் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி மேலும்

04

## வாழ்க்கையின் மதிப்பையும் தைரியத்தையும் தரும் உன்னத நாள்

### உயிர்த்த ஞாயிறு தின செய்தியில் பிரதமர்



ஒரு தியாக வாழ்க்கையின் மதிப்பையும், தைரியம் மற்றும் வலிமையையும் வாழ்க்கையில் அடைவதற்கான ஆன்மீக பாதையை எட்டுவதற்கு இன்றைய தினம் அனைவருக்கும் ஒரு முக்கியமான நாளாகும் என்று பிரதமர் தனது உயிர்த்த ஞாயிறு தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாழ்த்து குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,..

இயேசு மரணத்திலிருந்து

04



உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும்

## நீதி கிடைக்கும் வரை கிறிஸ்தவ மக்களது பொறுமை அளப்பரியது

### குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவர் - பிரதமர்

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி கிடைக்கும் வரையான கிறிஸ்தவ மக்களின் பொறுமை அளப்பரியதென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (03) தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்

04

மறைந்த ஆயருக்கு அஞ்சலி செலுத்த

## வடக்கு கிழக்கில் நாளை துக்கதினமாக அனுஷ்டிப்பு



### சிவில் சமூகங்கள் பிரகடனப்படுத்தியுள்ளன

நமது நிருபர்

மன்னார் மாவட்டத்தின் ஓய்வுநிலை பேராயர் இராயப்பு ஜோசப் காலமானதையடுத்து அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாளை திங்கட்கிழமை தமிழ்த் தேசிய துக்க தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதனை வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த

04

திடீர் மரண விசாரணை அதிகாரிகள் நியமனம்;

## வெற்றிடங்களுக்கு முஸ்லிம்களை நிரப்ப ஏற்பாடு என விஷம பிரசாரம்

போலி பிரசாரங்களுக்கு

திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு நிலவும் வெற்றி

## இறக்குமதி எண்ணெய்க்கு பதிலாக உள்நாட்டின் BCC தேங்காய் எண்ணெய்

### ச.தொ.ச ஊடாக நியாயமான விலையில் - அமைச்சர் பந்துல